**கவனிக்க.-** 2024.05.22 ஆந் திகதிய 2386 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இவ்வார வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்தில் நீதாசன வலயங்களுக்கான யூரிமார் பெயர்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2387 - 2024 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2024.05.31
*2387 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1330 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1327-B 82575-5,441 (2024/05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்தகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

01. **பதவி** : விரிவுரையாளர் - II (02 பதவிகள்)

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

02. **கல்வித் தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு** (கீழேயுள்ள 1 அல்லது 2)
1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 04 வருட சமூகப் பணி/சமூக விஞ்ஞான பாடத்தில் இளமாணி விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகப் பணி/ சமூக விஞ்ஞானம் உள்ளடங்கிய இளமாணி விசேட பட்டத்துடன் பொருத்தமான பாடத்துறையில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவை பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமையை பூர்த்திசெய்திருத்தல்.

03. **நேர்காணலில் புள்ளி வழங்கும் முறை :**

| | மதிப்பீட்டு முறை | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | கல்வித் தகைமை (அடிப்படை தகைமைகளுக்கு மேலதிகமாக) | 30 |
| 2 | கற்பித்தல் அனுபவம் | 10 |
| 3 | ஆய்வு மற்றும் வெளியீடு | 20 |
| 4 | மேலதிக செயற்பாடுகள் | 10 |
| 5 | ஆளுமை | 15 |
| 6 | துறைசார் பொது அறிவு | 15 |
| | மொத்தம் | 100 |

04. **சம்பள அளவுத்திட்டம்** : AR-1 : ரூபா 53,150-10×1,375-15×1,910-ரூபா 95,550

**அனைத்து பதவிக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**
1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்
2. பதவி நிரந்தரமானது
3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
4. மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது.

**குறிப்பு:** இப் பதவிக்கான வெற்றிடங்கள் சீதுவை பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பிரதான அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும்.

*சேவை நிபந்தனை* : 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

*இணைத்துக்கொள்ளும் முறை* : நியமன அதிகாரியின் பணிப்பின் பேரில் நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடாத்தப்படும். அதிக புள்ளிகளை பெற்றவர்களுள் திறமை அடிப்படையில் தெரிவு நடைபெறும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2024.06.14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி ரவீந்திர விதானச்சி,
பணிப்பாளர் நாயகம் (ப.க.),
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை,
2024, மே 21.

05-314

---

## இலங்கை நிரந்தர கடற்படையின் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. தகைமைகளையுடைய ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிறைவேற்றுப் பிரிவு
2. பொறியியற் பிரிவு
3. மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியற் பிரிவு
4. காலாட்படைப் பிரிவு
5. வழங்கற் பிரிவு
6. ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவு

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்.-**

அ. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தாய்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் பின்வரும் பிரிவுகளுக்காக சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

1. **நிறைவேற்றுப் பிரிவு** - உயிரியல் விஞ்ஞானம், பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களைக் கற்று 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. **பொறியியற் பிரிவு** - பௌதிகவியல், இணைந்த கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்று 02 திறமைச் சித்திகள் மற்றும் 01 சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   (தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வெளிநாட்டுக் கடற்படை பல்கலைக்கழகம்/ கல்லூரியில் 04 வருடப் பட்டத்தினைத் தொடருவதற்கான வாய்ப்பினைப் பெறுவர்.)

3. மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியற் பிரிவு (ஆண்கள் மட்டும்) - பௌதிகவியல், இணைந்த கணிதம், மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்று 02 திறமைச் சித்திகள் மற்றும் 01 சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். (தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வெளிநாட்டுக் கடற்படைப் பல்கலைக்கழகம்/ கல்லூரியில் 04 வருடப் பட்டத்தினைத் தொடருவதற்கான வாய்ப்பினைப் பெறுவர்.)

4. காலாட்படைப் பிரிவு (ஆண்கள் மட்டும்) - குறைந்தபட்சம் எந்த ஒரு பரீட்சையில் (S) 03 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. வழங்கற் பிரிவு - பொருளியல், வியாபாரக் கற்கை அல்லது வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் கணக்கீடு ஆகிய பாடங்களைக் கற்று 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவு - குறைந்தபட்சம் எந்த ஒரு பரீட்சையில் (S) 03 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தேவைப்பாடுகள்.**- இலங்கை கடற்படையின் நிரந்தர கடற்படைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக பரீட்சார்த்திகள் பின்வரும் பொது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(அ) தேசிய இனம் - இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 22 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் - ஆண் - 5 அடி 6 அங்குலத்தை விடக் குறையாதவராகவிருத்தல் வேண்டும். (ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவிற்கு 5 அடி 7 அங்குலத்தை விடக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்)

பெண்- 5 அடி 3 அங்குலத்தை விடக் குறையாதவராகவிருத்தல் வேண்டும். (ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவிற்கு 5 அடி 4 அங்குலத்தை விடக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்)

(ஈ) நிறை - ஆண் - 52 கிலோகிராமிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்.

பெண்- 41 கிலோகிராமிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்.

(உ) மார்பு (ஆண்) - 32 அங்குலத்தை விடக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்.

(ஊ) நிறப்பார்வை - STD II

(எ) கட்புலக் கூர்மை - இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக் கண்ணாடிகள்/கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்)

(ஏ) ஏனைய கல்வித் தகைமைகள் : க. பொ. த. (உ/த) பரீட்சையில் பொது அறிவுப் பரீட்சையில் 30 இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல்.
க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைப் பல்கலைக்கழக நுழைவிற்கான குறைந்தபட்சத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். (பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்று படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.)

(ஐ) குடியியல் நிலை- திருமணமாகாதவர். (எந்தவொரு பயிலிளவல் உத்தியோகத்தரும் பயிற்சிக் காலத்தின் போதும் அதிகாரமளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள்ளும் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

5. மேலதிக பாடங்கள் க.பொ.த. (சா/த) கல்வித் தகைமைகளாகக் கருதப்படமாட்டாது.

6. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுச் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சாதனைகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படலில் விசேட கவனஞ் செலுத்தப்படும்.

7. மேற்சொல்லப்பட்ட 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள்:**

அ. இலங்கை நிரந்தர கடற்படையினுள் பரீட்சார்த்திகள் பயிலிளவல் உத்தியோகத்தர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டு அடிப்படைப் பயிற்சிக் கற்கைநெறியினையும் தொடருதல் வேண்டும். தாம் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற உரிய பிரிவுக்கான அடிப்படைப் பயிற்சிக் கற்கைநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்கின்ற பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பதில் உப லெப்டினனாகப் பதவிக்கமர்த்தப்படுவர்.

ஆ. இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதியின் தீர்மானத்திற்கமைய, சேர்த்துக்கொள்ளப்படுகின்ற பயிலிளவல் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சியைத் தொடருவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. பயிலிளவல் உத்தியோகத்தர்கள் அனைவரும் எந்தவொரு நேரத்திலும் இலங்கையில் அல்லது உலகின் எந்தவொரு நாட்டிலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காகப் பதவிக்கமர்த்தப்படவேண்டிய பொறுப்புடையவராகின்றனர்.

ஈ. பயிலிளவல் உத்தியோகத்தர்கள், பயிற்சிக் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் தற்போதுள்ள இலங்கை கடற்படைச்சட்டம், இலங்கை கடற்படைக் கட்டளைகள் மற்றும் விதிக்குறிப்புகள் அத்துடன் இதன்பின்னர் விதிக்கப்படக்கூடிய சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றினால் வலுவளிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டவராவர்.

உ. பயிற்சிக் காலப்பகுதியின் போது பயிலிளவல் உத்தியோகத்தரொருவர் துர்நடத்தையின் காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டினுள்ளான செயலுக்குத் தகவுடையாமையின் காரணமாக பொருத்தமற்றவரென அதிகாரிகளால் அறிக்கையிடப்படும் எந்தவொரு நேரத்திலும் அவரது பயிற்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவீனங்கள் அனைத்தையும் இலங்கை கடற்படைக்கு மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுவார். அவ்வாறு செய்யத் தவறின், பிணையாளிகள் இலங்கை அரசாங்கத்திற்காகச் செயற்படுகின்ற இலங்கை கடற்படைக் கட்டளைத் தளபதியுடன் இதன் விளைவுறும் உடன்படிக்கை மற்றும் முறியொன்றைச் செய்து கொள்வதன் மூலம் பயிற்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவீனங்கள் அனைத்தையும் மீளச்செலுத்துவதற்குத் தேவைப் படுத்தப்படுவர்.

ஊ. பயிலிளவல் உத்தியோகத்தரொருவர் பயிற்சியின் போது தனது பரீட்சார்த்த நிலையை தன்னிச்சையாக முடி வுறுத்தின் அத்தகு பயிலிளவல் உத்தயோகத்தருக்காக இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை மேற்கொள்ளப் பட்ட செலவீனங்கள் அனைத்தையும் இலங்கை அரசாங்கத்திற்கு மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப் படுவார். பயிலிளவல் உத்தியோகத்தர் அவ்வாறு செய்யத் தவறின் பிணையாளிகள், அதுவரை காலமும் ஏற்பட்ட செலவீனங்கள் அனைத்தையும் மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

எ. பயிற்சிக்காலத்தின் போதான விபத்துக்கள் மற்றும் நீண்டகால இயலாமைகள் இலங்கைக் கடற்படையில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள காப்புறுதியின் மூலம் காப்பீடு செய்யப்படுவதுடன், இலங்கைக் கடற்படை விசேட இழப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு பொறுப்புடையதாகாது.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தின் மொழிக் கொள்கைக்கு பயனுறுதியளிக்கும் வகையில் ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இதன்பின்னர் ஆக்கப்படக்கூடிய கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கிச் செயற்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

10. கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் (பயிற்சிக் காலப்பகுதியின் போதான) இக் கட்டணங்கள் 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் செலுத்தப்படும்.

| விபரம் | பயிலிளவல் உத்தியோகத்தர் (ரூ.) | கனிஷ்ட தர பயிலிளவல் உத்தியோகத்தர்கள் (ரூ.) |
|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 32,380.00 | 32,750.00 |
| வாழ்க்கைச் செலவு | 17,800.00 | 17,800.00 |
| சீருடைக் கொடுப்பனவு | 525.00 | 525.00 |
| மேலதிக கொடுப்பனவு | 1,000.00 | 1,000.00 |
| விசேட சீராக்கற் கொடுப்பனவு | 3,000.00 | 3,000.00 |
| மேலதிக கொடுப்பனவு 2022 | 5,000.00 | 5,000.00 |
| உணவு கொடுப்பனவு | 34,846.80 | 34,846.80 |
| மொத்தம் | 94,551.80 | 94,921.80 |

11. பயிற்சியின் போதும் பயிற்சியின் பின்னரும் வசதிக் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு உரித்தாதல்.

அ. சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்களுக்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப் பாடநெறிகளை அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப் பாட நெறிகளை தொடருவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஆ. சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

இ. வருடமொன்றிற்கு மூன்று சோடி விடுமுறைப் புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையவிடத்து தங்கிவாழ்வோர் ஆகியோருக்கு)

ஈ. தங்கியுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாதமொருமுறை அவர்களது வீடுகளுக்குச் சென்றுவர கடமைப் புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்படும் அல்லது பேருந்துக் கட்டணங்களை மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

உ. சீருடை மற்றும் அது தொடர்பான உருப்படிகள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும் (உத்தியோகத்தர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையவிடத்து தங்கிவாழ்வோர் ஆகியோருக்கு).

எ. அரசாங்கத்தின் திருமணமானவர்களுக்கான தங்குமிடங்களில் குடியிராத திருமணமான உத்தியோகத்தர்கள் ரூ. 3,200.00 தொடக்கம் ரூ. 8,500.00 வாடகைக் கொடுப்பனவொன்றிற்கு உரித்துடையவராவர்.

ஏ. வெளியிலிருந்து உணவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தயோகத்தர்களுக்கு மாத்திரம் உலருணவுப் பணக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஐ. ஏற்புடையவிடத்து தகைமைக் கட்டணமாக மாதமொன்றிற்கு அதிகபட்சம் ரூ. 637.50 வரை வழங்கப்படும்.

12. **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்:**

அ. விண்ணப்பங்கள் கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க அமைதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் விபரங்கள் தெளிவாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2024, யூலை மாதம் 04 ஆந் திகதி 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பித்தல்), கடற்படைத் தலைமையகம், த.பெ.இல. 593, கொழும்பு- 01" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவல் உத்தியோகத்தர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் அதே வகையில் நிகழ்நிலை முறையில் (Online) ஊடாகவும் விண்ணப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இரு வழிகளிலும் சமர்ப்பிக்கப்படாத, பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படாது.

மேலதிக விபரங்களுக்கு, www.navy.lk எனும் முகவரிக்கு பிரவேசிக்கவும் அல்லது 011-7195120/011-7195154 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

ஆ. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் அறிவித்தல் எதுவும் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான முறைப்பாடுகளெதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. மேலும், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது.

இ. பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வின் போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவர்:

1. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்;
2. விண்ணப்பிக்கும் பிரிவுக்குத் தேவைப்படுத்தப்படும் கல்வி/உயர் கல்வி/தொழில்சார் கல்வி/பட்டப்படிப்புத் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;
3. பாடசாலை விடுகைச் சான்றிதழ் மற்றும் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்;
4. ஆறுமாத காலத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்;
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட (ஏதேனும் இருப்பின்) தொழில்சார்/ தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ்;
6. இருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் (பரீட்சார்த்தியை இரு ஆண்டுகளுக்கு மேலாக நன்கு அறிந்த பொறுப்பான நபர்களிடமிருந்து);
7. விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வேறு தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

ஈ. வேண்டப்படும் போது மேற்சொல்லப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

உ. ஆவணங்களின் மூலப்பிரதியோ ஏனைய ஆவணங்களோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது. விண்ணப்பத்துடன் இணைக்கப்படின் சான்றிதழ்களின் மூலப்பிரதி ஏதேனும் காணாமற்போயின் அதற்கு இலங்கைக் கடற்படை பொறுப்புடையதாகாது.

13. விண்ணப்பத்திலுள்ள ஏதேனும் கூற்று பிழையானது எனக் கண்டறியப்படின் அத்தகைய தவறான கூற்று தெரிவிற்கு முன்னர் அல்லது தெரிவின் பின்னர் வெளிப்படுத்தப்படுமிடத்து அப் பரீட்சார்த்தியை முறையே தகைமையீனம் அல்லது பதவி நீக்கத்திற்குப் பொறுப்புடையவராதலாக்கும்.

**14. ஆட்சேர்ப்பு நடைமுறை**

அ. மேற்குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் அடிப்படை நேர்காணலுக்குத் தோன்றும் போது உயரம், வயது, கண்பார்வை மற்றும் எடை ஆகியவற்றைச் சரிபார்க்க ஆரம்ப மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம், வயது, பார்வை மற்றும் எடை ஆகியவற்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரிகள் உயரம் மற்றும் வயது தேவைகளுக்கு ஏற்ப இல்லாவிட்டாலும், கடற்படை சேவைக்கு பயனுள்ள சிறப்புத் திறன் இருந்தால், அவர் சேவைத் தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் ஒப்புதலுடன் பரிசீலிக்கப்படுவார். அடிப்படை நேர்காணலில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே பின்வரும் உடல் தகுதித் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படுவார்கள்.

ஆ. உடற்றகைமைச் சோதனையில் சித்தியடைவதற்கான தேவைப்பாடுகள்:

| நிகழ்வு | சுற்றுக்கள் | | நேரம் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1600 மீ. ஓட்டம் | - | - | 09 நிமிடங்கள் | 11 நிமிடங்கள் |
| Push Up | 12 அல்லது அதற்கு மேல் | 08 அல்லது அதற்கு மேல் | 01 நிமிடம் | 01 நிமிடம் |
| Sit Up/Curl Ups | 10 அல்லது அதற்கு மேல் | 07 அல்லது அதற்கு மேல் | 01 நிமிடம் | 01 நிமிடம் |

இ. உடல் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே கடற்படை பொது மருத்துவமனையால் நடத்தப்படும் முழு மருத்துவப் பரிசோனைக்கு பரிந்துரைக்கப்படுவார்கள். மேலும் மருத்துவ தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே இரண்டாவது நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில், அவர்கள் இறுதி நேர்காணலுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள் மற்றும் கிடைக்கக்கூடிய காலியிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு பிரிவிலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே பணியமர்த்தப்படுவார்கள்.

ஈ. ஆட்சேர்ப்பிற்குப் பொருத்தமற்ற பரீட்சார்த்திகளுக்கு அறிவிப்பு வழங்கப்படமாட்டாது.

உ. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அந் நேர்முகப் பரீட்சைகளுக்கான திகதி, நேரம் மற்றும் இடம் பற்றிய விபரங்கள் புலனம் (WhatsApp) மூலம் மாத்திரம் அறிவிக்கப்படும் என்பதுடன், தபாலில் எழுத்துமூல தகவலெதுவும் அனுப்பப்படமாட்டாது. இது தொடர்பான பிரயாண அல்லது ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

ஊ. பரீட்சார்த்தியொருவர் நேர்முகப் பரீட்சையொன்றிற்காக அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு முறையும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய அடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. பரீட்சார்த்தியொருவரைப் பரிந்துரைசெய்ய விரும்பும் எவரேனுமாள் அவருக்கு நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவரின் தெரிவில் ஏதேனும் முறையில் ஆதரவளித்தல் அல்லது செல்வாக்குச்செலுத்த முயற்சித்தல் அப் பரீட்சார்த்தியின் தகைமையீனத்திற்குக் காரணமாக அமையும்.

ஏ. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்படும் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் வலிது பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து சரிபார்க்கப்படும்.

ஐ. பரீட்சார்த்திகள் அனைவரினதும் பாதுகாப்பு இசைவு பற்றிய அறிக்கைகள் கடற்படைத் தலைமையகத்தினால் மீளச் சோதனைக்குட்படுத்தப்படும்.

15. இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தைக்கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு, இராணுவ மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக்கொண்டிருப்பார்.

**குறிப்பு**: இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுகிறது. இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

யூவிஎம்பி பெரேரா, ஆர்எஸ்பி**,
யூஎஸ்பி, என்டியூ, பிஎஸ்சி,
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைக் கட்டளைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

**இலங்கை நிரந்தர கடற்படையின் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள்**

1. தேசிய இனம்:....................................................................................................................................

(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிட்டு, பதிவு மூலமான பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) :..........................................................................................................

3. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) :.....................................................................................

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

5. நிரந்தர முகவரி:

6. தபால் முகவரி:

7. மின்னஞ்சல் முகவரி:

8. பிறந்த திகதி:..........................................................

9. வயது: வருடங்கள் : .............. மாதங்கள். : .......... நாட்கள்: .........

(2023 ஆம் ஆண்டு ......... ............ ஆந் திகதியன்று)

10. உயரம்:............................., (அங்குலங்கள்) மார்பு:......................., (அங்குலங்கள்) நிறை:......................., (கி.கி)

11. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம்:.......................................,

12. மாவட்டம்:.......................................................

13. தேர்தல் தொகுதி:..........................................

14. கிராம அலுவலர் பிரிவு:............................................

15. தொலைபேசி இலக்கம்/புலன இலக்கம் (WhatsApp):...........................................

16. குடியியல் நிலை :.....................................................

17. பால்:.........................................................

18. சமுகமளித்த பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்கள் பற்றிய விபரங்கள்

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | பரீட்சை வகை | பரீட்சைக்கு தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.):<br>க.பொ.த. (உ.த.):<br>வேறு: | | |

19. பாடசாலை/பல்கலைக்கழகத்திலிருந்து விலகியதன் பின்னரான தொழில் விபரங்கள் :- (ஏற்புடையதாயின்)

| தொழில் வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

21. விண்ணப்பிக்கும் பிரிவுக்கான ஏதேனும் விஷேட தகைமை:
..............................................................................................................................................................

22. விளையாட்டுக்களில் பெற்றுக்கொண்ட சாதனைகள் பற்றிய விபரங்கள். (திகதி மற்றும் சாதனைகளுடன் பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள் பற்றிய விபரங்களை வழங்கவும்)
..............................................................................................................................................................
..............................................................................................................................................................

23. பாடசாலை/ நிறுவனத்திற்கு வெளியேயான ஏனைய சாதனைகள் (திகதிகள்/ வருடங்கள் மற்றும் ஏனையவற்றுடன் விபரங்களை வழங்கவும்)
..............................................................................................................................................................

24. ஆயுதந் தாங்கிய படை அல்லது தொண்டர் படை, பயிலிளவல் படையணி அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் ஏதேனும் முன்னைய சேவைகள்:

25. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதந்தாங்கிய படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களையும் அத்தகைய விண்ணப்பங்களின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக.
..............................................................................................................................................................
..............................................................................................................................................................

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் தண்டனையொன்றை அல்லது ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக.
..............................................................................................................................................................
..............................................................................................................................................................

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

என்னால் மேற்சொல்லப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கடற்படையில் செயற்படுவதற்காக தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகளுக்கு ஏற்புடையதாகின்ற பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் ஒழுங்கு விதிகளையும் வாசித்துப் புரிந்துகொண்டுள்ளேன்.

................................................ ............................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

05-315

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.